Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 258/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | உதயகுமார் |
| Father's Name | – | பெருமாள்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 30th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொள்ளுபாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறேன். என் தந்தையார் பெயர் பெருமாள் சாமி, மாமா பெயர் சண்முகசுந்தரம் ஆகும். மேற்படி இருவரும் சாலை விபத்தில் இறந்துவிட்டனர்.

கடந்த 13.02.2021ம் தேதி மதியம் 02.30 மணியளவில் என் தந்தையாரின் செல்போனில் இருந்து மாசாணியப்பன் என்பவர் அழைத்து விஜயாபுரம் பெட்ரோல் முன்புறம் வைத்து இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளானது என்றும், அதில் என்னுடைய மாமாவிற்கும் தந்தைக்கும் காயம் ஏற்பட்டதாகவும், அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் தகவல் கூறினார்.

அதன் அடிப்படையில் நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, மேற்படி இருவரும் விபத்தின் காரணமாக இறந்துவிட்டதாகவும், உடல் சவக்கிடங்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நான் எனது குடும்பத்திற்கு தகவல் கூறினேன்.

பின்னர் நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். TN 39 BH 7368 என்ற கார் ஒன்று பின்னால் வந்து என் மாமா ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியதாக தெரிவித்தனர். பின்னர் நான் விபத்து மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும்.

பின்னர் மறுநாள் காலை என்னுடைய தந்தையாரின் பிரேத்தின் மீது போலிசார்

மீது பிரேத விசாரணை நடத்தியபோது நான் என் தந்தையார் மற்றும் என் மாமாவின் சடலத்தினை அடையாளம் காட்டி பிரேத விசாரணையின் போது உடனிருந்தேன். மேற்படி விபத்தினை ஏற்படுத்தியர் பெயர் தாமோதிரன் என்று, விஜயபுரம் பாரத் பெட்ரோலில் பங்கில் பணிபுரியும் மாசாணியப்பன் என்பவர் தெரிவித்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 258/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | அன்பழகன் |
| Father's Name | – | நாச்சிமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 30th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொள்ளுபாளையத்தில் குடியிருந்து கொண்டு மினிடோர் வைத்து தொழில் செய்து வருகிறேன். 13.02.2021 ம் தேதி இரவு 07.30 மணிக்கு பொள்ளாச்சிக்கு வந்து கொண்டிருந்தபோது, விஜயாபுரம் பெட்ரோல் பங்கிற்கு எதிரில் சாலையின் தென்புறம் போலிசார் நின்றுக்கொண்டிருந்தனர்.

நான் சென்று கேட்டபோது, காரும், இருசக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது இறந்துவிட்டதாக கூறினார்கள். சம்பவயிடத்தில் வைத்து போலிசார் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நான் அதில் சாட்சி கையெழுத்து செய்தேன்.

பார்வை மகஜரில் உள்ள விவரங்களை படித்து காண்பித்தார்கள். என்னோடு வந்த கிருஷ்ணராஜ் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.